# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2012
கார்த்திகை 24
ஸபர் 11
புதன் (9-12-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 52
☎ 8164
விலை: சதம் 75


# "உயிரைக் கொடுத்தேனும் தமிழீழம் அமைப்போம்!"

## பாண்டிச்சேரி கூட்டத்தில் அமிர் தூளுரை

"உயிரைக்கொடுத்தாவது இலங்கையில் தனித் தமிழ்நாடு அடைந்தே தீருவோம். தனிநாடு அமைப்பதுதவிர இலங்கைத் தமிழர்களுக்கு வேறு வழியே இல்லை"

இவ்வாறு இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி கம்பன் கலையரங்கில் பாண்டிச்சேரி மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய த.வி.கூ. செயலாளர் நாயகமும், ஸ்ரீலங்கா நாடாளுமன்ற எதிர்க்கட்சிமுதல்வருமான திரு.அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

புதுச்சேரி மக்களும், அமைச்சர்களும், அரசும், எங்கள்பால் இவ்வளவு பாசத்தை வைத்திருப்பதற்கு நன்றி. எங்கள் நூல

—4-ம் பக்கம் பார்க்க



## புதுவை முதல்வர் — அமிர் சந்திப்பு

அண்மையில் சென்னைக்குச் சென்றிருந்த த.வி.கூ, செயலதிபரும் ஸ்ரீலங்கா நாட்டின் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கமும், அவரது துணைவியாரும் பாண்டிச்சேரிக்கு விஜயம் செய்தனர். அங்கு பாண்டிச்சேரி முதல்வரைச் சந்தித்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து விளக்கமளித்ததுடன், இலங்கைத் தமிழர் சார்பில் தீர்மானம் நிறைவேற்றியதற்காகவும் நன்றி தெரிவித்தனர். படத்தில் திரு. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோருடன் பாண்டிச்சேரி முதலமைச்சர் டி. இராமச்சந்திரன், அமைச்சர்கள் பெருமாள் ராஜா, சிவகுமார், கதிர்வேல், அரசுக்கொறடா நா. மணிமாறன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படம்: வல்வையூரான்)

## போராட்டத்தின் மூலம் சுயநிர்ணய உரிமை!

### ஐ. நா. மன்றம் ஆதரவு!

காலனித்துவம், மற்றும் இத்தகைய ஆட்சிப் பிடிப்புக்குள் கட்டுப்பட்டிருக்கும் மக்கள் தமது சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமையையும் பெறுவதற்கு தம்மாலான சகல முயற்சிகளையும் போராட்டங்களையும் மேற்கொள்வதை ஆதரிப்பது என ஐக்கியநாடுகள் பொதுச்சபை தீர்மானித்துள்ளது, இத்தகைய அடிமைப்பட்ட நாடுகள் விடுதலை பெறத் தம்மாலான சகல முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்றும் பொதுச்சபை கேட்டுள்ளது.

## ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் செய்தித் திரிப்பு!

இலங்கையில் சமாதானத்தையும் இன ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசு — தமிழர்விடுதலைக்கூட்டணி நடத்தும்பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி திருப்தி தெரிவித்ததாகவும், திருகோணமலையை எந்தவல்லரசுக்கும் கையளிப்பதில்லை என்ற இலங்கையின் நிலைப்பாட்டுக்கு இந்தியப்பிரதமர் திருப்தி தெரிவித்ததாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 4-12-81 இல் ஒலிபரப்பிய செய்திகளில் விளம்பரப்படுத்தியது.

அதாவது — திருமதி இந்திராகாந்தியேநேரடியாக மேற்கண்ட செய்திகளைக் கூறியிருப்பதாகத்தான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியைக் கேட்டவர்கள் நினைத்திருப்பார்கள்.

ஆனால்ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் குட்டு மறுநாள் (5-12-81) நாளேட்டுச் செய்திகளால் உடைபட்டது.

இந்திராகாந்திமேற்கண்டவாறு தெரிவித்ததாக அண்மையில் டெல்லி சென்று திரும்பிய வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சர் லலித் அத்துலத்முதலியே அவ்வாறு கூறியிருக்கிறாரென் பதும், இந்திராகாந்தி நேரடியாக எதையும் தெரிவிக்கவில்லையென்ற உண்மையும்அம்பலமாகியது.

அதே சமயத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தலைமையில் (இந்திரா காங்கிரஸ், திமுக தவிர்ந்த) தமிழகத்தின் அனைத்துக்கட்சிகளும் புதுடெல்லி சென்று மகஜர் ஒன்றைத் திங்களன்று (7-12-81) கையளிக்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

## தமிழர்கள் யார் என்று கேட்டு

### ரயிலில் தாக்குதல் கத்திக்குத்து!

பதுளையிலிருந்து கொழும்புநோக்கிவந்துகொண்டிருந்த இரவு தபால் புகைவண்டியில் பயணம் செய்த மலையகத் தமிழர்கள் சிங்களநாட்டிலுள்ள வியாங்கொடையில் வைத்துக் காடையர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் 1.12.81அதிகாலை5 மணிக்கு நடைபெற்றது.

வியாங்கொடையில் ரயில் நின்றுவிட்டுப் புறப்பட்ட

—4-ம் பக்கம் பார்க்க

## கடற்படைத்தளத்துக்கு திருகோணமலையும் வாய்ப்பான இடமாம்

### அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தயாரித்துள்ள படத்தில் குறிப்பு!

அமெரிக்காவின் இராணுவக் கூட்டு அதிகாரிகள் குழு (ORGANISATION OF THE JOINT CHIEFS- OF-STAFF OF THE U.S. ARMY) உலகில் தனக்குச் சாதகமானதும், வசதிவாய்ப்புள்ளதுமான கடற்படைத் துறைமுகங்களைச் சுட்டிக்காட்டும் ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

—4-ம் பக்கம் பார்க்க

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

# இலங்கைத் தமிழர்கள் சிக்கல் உள்நாட்டுப் பிரச்சினையல்ல!

## உலக அமைதிப்படை இங்கு அனுப்பப்பட வேண்டும்

### மனித உரிமை ஆசிய மன்றம் கோரிக்கை

தென்காசிய மண்டலத்தின் மனித உரிமை ஆசிய மன்றத்தின் சார்பில் அதன் தலைமைக்குழு உறுப்பினர் எஸ். குணசிலன் அவர்கள் சிறீலங்காவின் ஜனுதிபதி ஜே- ஆர். ஜெயவர்த்தனுவுக்கு சிறீலங்காவில் மனித உரிமை மீறப்படுதல் குறித்துக்கண்டனக்கடிதம் ஒன்றை எழுதியுள்ளார், பெங்களூரிலிருந்து அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு:—

"இலங்கையில்நடைபெறுவனவற்றைஇவ்வுலக மக்கள் இனியும்பொறுப்பற்று பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள், சின்னஞ்சிறு இலங்கையின் மக்கள் தொகையில் 11 விழுக்காட்டினுராய சிறுபான்மைத் தமிழ்வழியினர், அங்குள்ளபெரும்பான்மைச் சிங்களவரைப்போலவேஅந்நாட்டின் உரிமை வாய்ந்த ஒரு பகுதியினரேயாவர்-

பெரும்பான்மைச் சிங்களவர்க்குரிய அரசுத்துணை வலிமையுடன் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களாக வாழும்தமிழ்ச் சிறு பான்மையினர், பல்வகைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றனர்,

அந்நாட்டிலே பல தலைமுறைகளாகப் பிறந்து வாழ்ந்துவந்தசிறுபான்மைஇனத்தவரில் இலட்சக் கணக்கானேர் நாடற்ருேர் என ஏமாற்றப்பட்டு அருகில் உள்ள தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

ஈழத்தில்வாழும் 20இலட்சம் தமிழ் மக்களும் தங்களுக்குப் பிறர் குறுக்கீட்டால் தங்கள்உரிமைகளைக் காத்துக்கொள்ளும் நேர்மையான நயன்மை கிடைக்காது என்று மெய்யாய்த் தெளிந்தமையாலும் தொடர்ந்து தங்களுக்கு நேர்ந்து வரும் இழிவுகளையும் அரசின்வன் முறைகளையும்பொறுக்க முடியாமலும் தங்கள் உரிமைகளைப் போராடிக் காத்துக்கொள்ளும்தன்னுறுதியுடன் அரசியல் அடிப்படையில் ஒன்ருய் அணிவகுத்துள்ளனர்-

சிறுபான்மையினர் அமைதியாகவும் மதிப்புடனும் வாழும் சூழலை உருவாக்க உதவாமல்அந்நாட்டரசுமறுதலையாகத் தீர்மானித்தது, தமிழீழ விடுதலை முன்னணியினரைத் தனிக் குறியாகக் கொண்ட இலங்கை அரசு தம்படை காவல்துறை வழியாகவன்முறையைத்தூண்டிவிட்டது- மிகச்சிறிய கரணியங்களைக் காட்டித் தமிழ்த் தலைவர்களைச்சிறையிலிட்டும் கைது செய்து துன்புறுத்தியதுடன். அவர்களின் வீடுகளும் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

தமிழ்ச்சிறுபான்மையினர் மீது சிங்களப் பெரும்பான்மையினரின் வன்முறைச் செயல்களும் வேண்டும் என்றே தூண்டப் பட்டன. தமிழ்க்குடி மக்களின் அரசியல் சார்பைக்கரணியமாய்க் கொண்டு அவர்களின் வெளிநாட்டுச்செலவும் மறுக்கப் பட்டது. அரசைக் குறைகூருத கருத்துக்களைச் சொல்வதற்கு மட்டுமே பேச்சுரிமையளிக்கப்பட்டது.

சுருங்கக்கூறின், உரிமைமிக்க உலகக்குடி மக்களால். நுகரப்பெறும் நாகரிகஅரசியல்பண்பாட்டு குமுகாயமுதலானஉரிமைகள் தமிழருக்கு வெளிப்படையாகவும் உள்முகமாகவும் மறுக்கப் பெறுகின்றன. இத்தகைய வளர்ச்சிக்கட்டத்தில் அங்கு அண்மையில் (5.5,81) அபிவிருத்திச்சபைத்தேர்தலின்போது நடைபெற்ற வன்முறைகள் தொடர்ந்த மனித உரிமை மீறுகையின் ஒரு பகுதியேயாகும்.

அக்கொடியநாளில். சிறுபான்மைத்தமிழர் மீது அஞ்சும்படியான கொடுமைகள கட்டவிழ்த்துவிடப்பட்டன சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டனர், அவர்தம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. படையினரின் ஆரவாரமிக்க வேட்டெஃகச் சூட்டிற்கு ஏதுமறியாத ஏழு உயிர்கள்பலியாகின தமிழர் பெரும் பான்மையினராய் வாழும் பகுதிகளில் மட்டும் நெருக்கடி நிலை என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை, ஒன்றிய நாடுகள் பேரவையில்ஓர் உறுப்பானதுடன்.மனிதஉரிமைப் பிரகடனத்தில் ஒப்பமிட்ட நாடுமாகும். இருந்தும் தம் சிறுபான்மையினரைக் காக்கும் திறமின்றி ஒன்றியநாடுகளின் மனிதஉரிமை பிரகடனத்தில்இடம் பெற்றுள்ள தூய உரிமை விதிகளைத் தொடர்ந்து மீறுகின்றது. இத்தகைய குறைத்திறங்களால் அந்நாட்டின்உள்நாட்டுச்சிக்கல்களில் பிறர்தலையிடக்கூடாதுஎன்றஉரிமையையும் அந்நாடு இழக்கின்றது,

எனவே உலகப் புகழ்வாய்ந்த சட்டக் குழுவினர் இலங்கைக்குச் சென்று அங்குள்ள சூழலை ஆழ்ந்தகழ்ந்து ஆய்தற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசைவற்புறுத்தி தூண்டுங் கட்டாயநிலை மனித உரிமை ஆசியமன்றத்துக்கு ஏற்பட்டுள்ளது. அத்தகைய குழுவினர், ஆய்வுக்கு ஒப்படைக்கப்படும் பிறசெய்திகளுடன் தமிழ்க்குடிமக்களின் சிக்கல்களுக்கு நிலையான தீர்வு காணும்வரை நல்ல சூழலை உருவாக்குவதற்கும் சிறுபான்மையினர்க்கு நம்பிக்கையூட்டுதற்கும்ஆசிய நாடுகளைச்சேர்ந்த உலக அமைதிப்படை அங்கு சட்டஒழுங்குப் பொறுப்புடன் அனுப்பப் பெறுதல் 'வேண்டும்-

இக்கருத்திற்கு இலங்கை அரசின் இசைவான விடையை எம்மன்றம் பெரிதும் பாராட்டும். இக்கடிதம் கிடைத்தமையை அருள்கூர்ந்து தெரிவிக்கவும்,

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனுதிபதி கூறுகிறர்!

''அண்மையில்இன அடிப்படையில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டனர். உடமைகள்சூறையாடப்பட்டன- 'ஈழ'த்துக்கு எதிரான எதுவும் அறியாத அப்பாவி மக்கள் எதுவித காரணமுமின்றித் தாக்கப்பட்டனர். சிலர் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிருர்களோ புரியவில்லை''

—ஜனுதிபதி ஜே. ஆர்
(வீரகேசரி 29.11.81)



## ரஷ்ய பயணம்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேசக் கிளையின் உதவிப் பொருளாளர் திரு. பத்மநாதன் அவர்கள் சர்வதேசக்கருத் தரங்கு ஒன்றில் கலந்து கொள்ளுமுகமாகரஷ்யாவுக்குப்பயணமானுர்.

## 'தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டால் இலங்கையில் அமைதி ஏற்பட முடியாது'

### ஆலாலசுந்தரத்தின் கன்னிப் பேச்சு

"ஒருதேசியஇனத்தின் சுயநிர்ணயஉரிமைமறுக்கப்படும் போதுஅந்நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலவமுடியாது இணைந்து வாழ்ந்தது போதும்—இனித் தமிழர்களைத் தமிழர் களேசுயநிர்ணயஉரிமையின்அடிப்படையில்ஆளவேண்டும். தமிழ்மக்கள் போர்த்துக்கீயரிடம்இழந்த சுதந்திரத்தைமீட்கவேண்டும்.இதற்காகவே தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை தந்தனர். இதற்காக உழைக்கவே நாம் கடமைப்பட்டிருக்கிறேம்.

இவ்வாறு ஸ்ரீலங்காநாடாளுமன்றத்தில்வரவுசெலவுத் திட்டத்தின் போது தமது கன்னிப்பேச்சை நிகழ்த்திய கோப்பாய் பா.உ.திரு.மு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

"1972 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர்களாகிய நாம் பல அணிகளில் இருந்தோம்.அவ்வாண்டுகொண்டு வரப்பட்ட குடியரசு அரசியல் சட்டம் எமது பகையை மறக்கச் செய்தது, நாம் தமிழர் விடுதலைக்கூட்டணியாக ஒன்றுபட்டோம்.

தமிழ்மக்கள் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொடுமைகளுக்கும், புறக்கணிப்புக்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் உள்ளாகின்றனர்.

முன்னைய அரசாங்ககாலங்களில் அரசாங்கத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஏமாற்றத்தில் முடிந்தன. கசப்பான அனுபவங்கள்- ஏற்பட்டன.அதன்பின்னரே சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து ஒரு தேசியஇனம் என்ற அடிப்படையில் தம்மைத்தாமே ஆளவேண்டும் என்று தமிழ் மக்கள் ஒரு முடிவான தீர்மானத்துக்கு வந்தனர்.



தமிழ் மக்கள் போர்த்துக்கீயரிடம் 1619 ஆம் ஆண்டு இழந்த சுதந்திரத்தைமீட்க வேண்டும். தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளவேண்டும். இதற்காக உழைப்பதுவே எமது கடமை.

இதற்காகவே தமிழ் மக்களின் கட்டளை எமக்குத் தரப்பட்டுள்ளது. அந்தக் கட்டளையை பாதியில் கைவிடுவதோ அல்லது புறக்கணித்து நடப்பதோ ஜனநாயகமரபுக்குமாருனது பண்புள்ள ஓர் அரசியற்கட்சிமக்களிடம்பெற்ற ஆணைக்குமாருகச் செயற்பட முடியாது.

எமது இலட்சியத்தை யடைய நேர்மை சேவை தியாகம் ஆகியன உறுதுணை செய்ய வேண்டும் என்பதே தந்தை செல்வா பின்பற்றிக் காட்டிய நெறியாகும். அதனையே நாமும்கடைப்பிடித்து வருகிறேம்."

## பரந்தனில் மூவர் கைது!

பரந்தன் 5ஆம் வாய்க்காலைச் சேர்ந்த ஸ்ரீதரன். பரந்தனைச் சேர்ந்த பெரியதம்பி அவருடைய சகோதரர் ஒருவர், ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.ஸ்ரீதரன் 30/11/81 இல் சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்டார்,

பெரிய தம்பலனைச் சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதியைச் சேர்ந்த 20 பேர் சந்தேகத்தின்பேரில்இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக ஆனை இறவு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்-

பரந்தனைச் சேர்ந்த ஞானசேகரன் என்பவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரை இராணுவத்தினர் ஏற்கெனவே கைது செய்தது தெரிந்ததே.



# அமெரிக்காவுக்கு இங்கு இடமளிப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து!

## பாலஸ்தீனியருக்கு இஸ்ரேல் செய்ததையே இங்கு தமிழர்களுக்கு அரசு செய்கிறது

### நாடாளுமன்றத்தில் மானிப்பாய் எம். பி. கண்டனம்

வெளிவிவகார அமைச்சு மானியம் மீது வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு 1-12-81 இல் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் மானிப்பாய் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

இந்த அரசாங்கத்தின் உள்ளூர் பொருளாதார நிலை மோசமாக இருக்கிறது. வெளிநாடுகள் சம்பந்தப்பட்ட கொள்கையிலும் அரசின் நிலை தெளிவில்லாமல் இருக்கிறது. வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் சொந்தக் காலில் நிற்க முடியாமல் அரசு தடுமாறுகிறது.

அமெரிக்க பல் தேசிய கம்பனியான கோஸ்டல் பர்மூடாஸுக்கு திருகோணமலை துறைமுகப் பிரதேசத்தில் துறைமுக எண்ணெய்க்கு வசதிகள் அளிக்கப்பட்டிருப்பது ஆபத்தானது. இந்தகம்பெனி இலங்கையின் நலனைக் கவனிக்கப் போகிறதா அல்லது அமெரிக்காவின் நலனைக் கவனிக்கப் போகிறதா?

### குத்தகைக்கு 676 ஏக்கர்

இந்த பன்னாட்டு கம்பனியுடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செய்துள்ள ஒப்பந்தமானது 676 ஏக்கர் ாணியை 25 ஆண்டு காலத் க்கு இக்கம்பனிக்கு குத்த க்கு விட இடமளிக்கிறது. வையானால் இந்த குத்த யை மேலும் பத்து வரு களுக்கு நீடிக்கவும் ஒப் ம் இடமளிக்கிறது.

ாஷிங்டன் போஸ்ட் பத் கையில் திருமலை துறை அமெரிக்கசுப்பல்படை கு பொருத்தமான இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று உலகில் பல தரப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. ஆயுதப் போட்டியும் வலுவடைந்துள்ளது. அமெரிக்கா தனது பலத்தின் மூலமே சமாதானத்தை உண்டாக்க முற்பட்டுள்ளது. அமெரிக்கா தனது படையைப் பெருக்குவதிலிருந்து அதன் மனோநிலையை உணர முடிகிறது.

திருமலையில் பன்னாட்டு நிறுவனத்துக்கு இடமளித்திருப்பதானது இலங்கையின் சமாதானத்துக்கு பாதுகாப்பாக இல்லை. இந்த நிறுவனம் இலங்கையின் உத்தரவுகளுக்கு அடிபணியாமல் அமெரிக்காவின் உத்தரவுகளையே மதித்துச் செயல்படும் இந்த நிலை நல்லதல்ல.

### இந்தியாவுக்கும் பயமுறுத்தல்

இந்து சமுத்திரப் பிரதேசத்தில் வல்லரசுகளின் தலையீடு எமது நாட்டுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கே அச்சுறுத்தலாக இருக்கும். திருமலையில் அமெரிக்க செல்வாக்கு இலங்கை இந்தியாவுக்கும் மட்டுமல்ல தென் ஆசியாவுக்கே பயமுறுத்தலாகும். எனவேதான் அமெரிக்கா பன்னாட்டு நிறுவனம் திருமலை ஆதிக்கம் பெறுவதை எதிர்க்கிறோம்.

இந்தியா யுத்த அபாயம் ஒன்றை எதிர்நோக்குவதாக இந்தியப் பிரதமர் கூறி வருகிறார். அமெரிக்கா இந்தியாவுக்கு அருகில் ஆயுதகுவிப்பு நடத்திவருகிறது. இந்த சூழ்நிலையில் தான் அமெரிக்க கம்பனி இங்கு ஆதிக்கம் பெறுகிறது.

இந்தக் கம்பனி சர்வதேச எண்ணெய் வர்த்தகத்தை நடத்தப்போகிறது.

### கம்பூச்சியா

கம்பூச்சியாவை ஒருநாடாக இலங்கை அங்கீகரிக்க வேண்டும். இந்நாடு இப்போது அமைதியாக ஆட்சி நடத்திவருகிறது. இந்தியா இந்நாட்டை அங்கீகரித்து விட்டது. இப்படியிருக்க கம்பூச்சியாவை ஒருநாடாக அங்கீகரிப்பதில் இலங்கைக்கு என்ன தடை இருக்கிறது?

### குடியேற்றம் என்ற போர்வையில்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான ஒருமைப்பாட்டை இலங்கை தெரிவித்துள்ளது. ஆனால், இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை பாலஸ்தீனமக்கள் தெரிந்து கொண்டால் இலங்கையின் கொள்கையில் அவர்கள் சந்தேகப்படுவார்கள். இலங்கையில் உள்நாட்டில் குடியேற்றம் என்ற பெயரில் தமிழ்இனத்தாரின் காணிகள் அபகரிக்கப் படுகின்றன. பாலஸ்தீனர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டது போன்ற செயல்கள் இங்கும் நடக்கத்தான் செய்கின்றன. முசோலினிகளும் மொன்சியஸ்களும் இலங்கையிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்,

இந்திய வம்சாவளியினர் சிங்களம் பேசி சிங்களவர்களாக மாறினால்தான் நிம்மதியாக வாழலாம் என மற்ற இனத்தவர்களுக்குஇங்குஉபதேசமும் நடக்கிறது.

### ஆசியான் அமைப்பு

ஆசியான் அமைப்பில்சேர்வதன்மூலம் இலங்கைஎதை சாதிக்கப்போகிறது. ஆசியான்அமைப்பிலுள்ள நாடுகளில் சர்வாதிகார போக்கு உள்ளது. கம்யூனிஸ எதிர்ப்புக்கொள்கை உள்ளது. இவற்றில் எதை இலங்கை பின்பற்றப் போகிறது.

### பிரிவினைக் கோஷமும் பிலிப்பைன்சும்

பிலிப்பைன்ஸில்பிரிவினைக் கோஷம் எழுந்தபோது பிரதேசசுயாட்சி உரிமைவழங்கப்பட்டதே அதை இலங்கை பின்பற்றப்போகிறதா? அல்லது மலேசியா சிங்கப்பூரைபிரிய விட்டது போல் இங்கும் இலங்கை செய்ய விரும்புகிறதா? அந்த விவகாரத்தில் இலங்கையின் கொள்கை என்ன என்பது விளக்கப்படவேண்டும்.

அணிசேரா இயக்கத்தில் முன்னர் ஏகாதிபத்தியஎதிர்ப்புக் கொள்கைமிகுந்திருந்தது. இப்போது அக்கொள்கைநலிந்துவருகிறது அமெரிக்காவை எதிர்க்கும்ஐ.நா.



பிரகடனம்ஒன்றில் கைச்சாத்திட்டதற்காக ஐ.நா.விலுள்ளஅமெரிக்கத் தூதுவர் இலங்கையிடம் விளக்கம் கேட்டபோது இலங்கை அதற்காகமன்னிப்புக் கோரியது.

அமைச்சர் ஜனாப்.ஏஸீ. எஸ். ஹமீது:- யாரிடமும் மன்னிப்புக்கோரவில்லை. குறித்த விடயத்தில் விளக்கம் அளித்தோம்-

திரு. வி. தர்மலிங்கம்:— அமைச்சர் அப்படி கூறினால் ஏற்கிறேன்விளக்கம்கொடுத்ததும்ஒருவகை மன்னிப்புத்தானே?

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்துபௌத்த சின்னங்களைதோண்டிஎடுக்கும் ஒரு நடவடிக்கை தொடர்கிறது. குறித்தபிரதேசங்கள் பௌத்தர்களுக்கு உரியவைஎனக் காட்டுவதே இந்நடவடிக்கையின் நோக்கமாகும். முஸோலினியும் இப்படித்தான் பாலைவனங்களிலிருந்து புராதனச்சின்னங்களை கண்டெடுத்தான்,

# தமிழீழத் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு புதுவை முதல்வர் அளித்த கௌரவம்

## விடுதலை இயக்கத்துக்கு புதிய வலிவு சேர்ந்தது

சென்ற நவம்பர் திங்களில் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்து உலகத் தமிழர் முன்னேற்றக்கழகத்தின் முதலாவது தொடக்கவிழாவுக்கு தலைமை தாங்கியதமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் பாண்டிச்சேரி மாநிலத்துக்கும் நவம்பர் 10 ஆம் திகதி சென்றிருந்தார். திரு. அமிர்தலிங்கத்துடன் அவரது துணைவியார் திருமதி அமிர்தலிங்கமும் சென்றிருந்தார்.

தமிழ்ப் பண்பாட்டியக்கப் புதுச்சேரிக்கிளையின் அழைப்பை ஏற்றே திரு. அமிர்தலிங்கம் அங்கு சென்றிருந்தார். திரு. அமிர்தலிங்கத்தையும் அவரது துணைவியாரையும்— புதுச்சேரி சட்டசபை உறுப்பினர் திரு.மணிமாறன் எம்.ஏ. அவர்களும், புதுச்சேரி திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களும் வரவேற்றனர். திரு. மணிமாறன் அவர்கள் தமது இல்லத்தில் தமிழீழத் தலைவருக்கு தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து அன்றிரவு கம்பன் கலையரங்கத்தில் திருமதி பவானி மதுரகவி தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கமும் திருமதி அமிர்தலிங்கமும் உரை நிகழ்த்தினர்.

புதுச்சேரியில் தமிழீழ விடுதலை ஆதரவாளராகஇருந்து அண்மையில் காலஞ் சென்ற "காரைகோவிந்தன்" இல்லத்திற்கும் திரு.அமிர்தலிங்கம் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

மறுநாட்காலை (11-11-81) திரு. மூர்த்தி எம்.எல்.ஏ. அவர்கள் தமது இல்லத்தில் ஈழத்தலைவருக்குக் காலைச் சிற்றுண்டியளித்துக் கௌரவித்தார். புதுச்சேரிச் சட்டமன்றத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம்கொண்டுவந்து நிறைவேற்றுவதில், திரு. மூர்த்தி அவர்கள் தீவிரமாகச்செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரிஅரசின்வேளாண்மைத்துறை அமைச்சர்திரு. வி.எம்.சி. சிவகுமார் அவர்கள் ஈழத்தமிழர் தலைவருக்கும் துணைவியாருக்கும் மதிய உணவு விருந்தளித்துக் கௌரவித்தார்.

பாண்டிச்சேரி அரசின்சார்பில் புதுவை முதல்வர் திரு. தெ. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், முதல்வர் அவர்களதுசட்டமன்ற அலுவலகத்தில், தமிழீழத் தலைவருக்கும் துணைவியாருக்கும் தேநீர் வழங்கிக் கௌரவித்தார். இவ்வைபவத்தில் புதுவை அமைச்சர்கள் வி.எம்.சி. சிவகுமார், வி. கதிரவேல் ஜி. பெருமாள்ராஜா ஆகியோரும், அரசு கொறடா திரு. மணிமாறன் எம்.எல்.ஏ. அவர்களும், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதுவை முதல்வர் அவர்கட்கும் சக அமைச்சர்களுக்கும், திரு. அமிர்தலிங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டம், தமிழர் படும் துயரம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அத்துடன் சுதந்திரத் தமிழீழம் ஒன்றை அமைப்பதன் மூலமே இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புடனும் சுயமரியாதையுடனும் வாழமுடியும் என்பதை எடுத்து விளக்கிய ஈழத்தலைவர், சிங்களப் பொலீசாரால் தீயிடப்பட்ட யாழ்ப்பாண நூல்நிலையத்தை மீள்வித்துப்புனரமைக்கும்திட்டத்தை எடுத்துக் கூறி, அதற்கு புதுச்சேரி அரசின் உதவியையும் கோரினார். திரு.அமிர்விடுத்த கோரிக்கையைப் புதுவை முதல்வர் முழுமனதோடு ஏற்று ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார்.

இந்திராகாங்கிரஸ் எம்.பி. திரு.பி.சண்முகம்அவர்களும் ஈழத்தலைவரை தமது இல்லத்துக்கு அழைத்துக்கௌரவித்தார் இவ்வைபவத்தில்புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு பாரூக், அமைச்சர் கதிர்வேல் மற்றும் காங்கிரஸ்முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இரவு 7மணிக்கு புதுச்சேரி வழக்கறிஞர் மன்றத்தின்சார்பில், தமிழீழத் தலைவருக்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. இவ்வரவேற்புக்கு வழக்கறிஞர்கள் திருநாவுக்கரசு, வீரப்பன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.புதுச்சேரித் தலைமை நீதிபதி திரு. டேவிட் அன்னுசாமி அவர்கள்இறுதி வரை கலந்து கொண்டுதிரு. அமிர்தலிங்கத்தின் விளக்

—4-ம் பக்கம் பார்க்க

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.



# கொலைசெய்யப்பட்டவர்களுக்கு 'காணாமல் போனவர்கள்' பட்டம்

## சர்வதேச மன்னிப்புச்சபை எதிர்ப்பு

அரசாங்கத்தினுல் சந்தேகிக்கப்படும் எதிரிகள், உண்மையில் அதேஅரசினுல் அழிக்கப்பட்டுவிட்டபின்னர் அவர்கள் "காணுமற் போய்விட்டதாக" அரசாங்கங்கள் மூடிமறைத்துப் பாசாங்கு செய்வதை உலகமடங்கும அம்பலப்படுத்தும் இயக்கமொன்றை சர்வதேச மன்னிப்புச் சபை ஆரம்பித்துள்ளது;

லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை தந்த தகவலின்படி— அரசாங்கங்கள் மேற்கொள்ளும் இந்த அடாவடித் தனத்தைக் கண்டித்தும் இதை நிறுத்தக் கோரியும் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இயங்கும் சர்வதேசமன்னிப்புச்சபைப்பிரதிநிதிகள் கடிதங்களையும், மகஜர்களையும் அனுப்புவதுடன் கூட்டங்களையும் நடத்தவுள்ளனர்.

"பாதிப்புக் குள்ளானேர் பலர் இறந்து விட்டதாகவே அஞ்சப்படுகிறது; ஆனுல் "காணுமற் போய்விட்டார்கள்" என்ற விசேடபதப்பிரயோகம் அடக்குமுறையின் ஒரு வடிவமாகப்பிரயோகிக்கப்படுகிறது: அரசுகள்அவர்களைப் பற்றிதமக்குஎதுவுமே தெரியாததுபோல நடிக்கின்றன" என்றும் அது கூறியது.

இலங்கையிலும், 1979ஆம் ஆண்டு அவசரகாலச்சட்டத்தின்போது பாலேந்திரா, இராசேஸ்வரன், பரமேஸ்வரன், "காணுமல்" போனது தெரிந்ததே.

---

## யாழ்ப்பாணத்தில் மனிதஉரிமைநாள் நிகழ்ச்சிகள்!

காலை 10.00மணிக்கு கல்லூரி அதிபர்கள் சந்திப்பு தமிழர் பண்பாட்டின் வைபகத்தை யாழ். நூலகத்தை மீள்வித்தல் பற்றி ஆலோசிப்பதற்காக!

பிற்பகல் 3,00 மணிக்கு யாழ்வர்த்தகக்கைத்தொழில் தொழிலதிபர்கள் கூடுகின்றனர் மேற்படி நோக்கத்திற்குத்தமது நிதி அன்பளிப்பை உறுதி செய்வதற்காக!!

மாலை 5.30 மணிக்கு யாழ் மாநகரசபை ஒழுங்கு செய்துள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் தினப்பொதுக் கூட்டம் யாழ் முதல்வர் தலைமையில் இடம்பெறுகிறது!!!

---

## இரசாயனத் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம்

நவம்பர் மாதம் 25ஆம் திகதி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைநிர்வாகத்தின் கோரிக்கைக்கு இணங்க தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிய போது தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், நிரந்தர ஊழியர்களுடன் ஒத்துழைத்த ஏறக்குறைய 75 நாளாந்த ஊழியர்கள் ஆகியோருக்கு வேலை வழங்கப் படாததையடுத்து 1981 நவம்பர் 27 ஆம்திகதி முதல் பொது வேலை நிறுத்தமொன்றில்மேற்படிதொழிற்சாலை ஊழியர்கள் இறங்கியுள்ளனர்.

இத் தொழிற்சாலையின்நிர்வாகம் மேலும்இருதொழிற்சங்க நிர்வாக சபை உறுப்பினர்களையும் இருஅங்கத்தவர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

பரந்தனிலுள்ள தொழிற்சாலையைச் சீரழித்து எம்பிலிப்பிட்டியாவில் நிறுவுவதற்குகைத்தொழில்விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்மேற்கொண்டுவரும் முயற்சிக்கும் அது தொடர்பாக மேற்கொள்ள எத்தனித்துவரும் ஒழுங்கற்ற நியமனங்களுக்கும் பரந்தன் தொழிற்சாலையிலுள்ளதொழிற்சங்கங்கள் பெருந்தடையாக இருப்பதனுல் அவற்றை அழிக்கும் முயற்சியே இதுவாகும் என்று தொழிலாளர்கள்குற்றம் சுமத்தியுள்ளனர்.

---

## பொலீஸ் சேவையில் தமிழர்கள் தொகை 940

இலங்கை முழுவதும் பொலீஸ் சேவையில் 940 தமிழர்களே கடமை புரிகிருர்கள். இவர்களிலும் 101 பேர் மட்டக்களப்பிலும், 210 பேர் யாழ்ப்பாணத்திலும், 49 பேர் திருகோணமலையிலும் அட்டனில் 12 தமிழ்பொலீசாரும் கடமை புரிகின்றனர்.

இத்தகவல்களை நாடாளுமன்றத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு.ரி.பி. வெரப்பிட்டியா 3-12-81 இரவு வெளியிட்டார்.

---

## 32 தமிழ்க் குடும்பங்களுக்கு வெளியேற்ற உத்தரவு!

கம்பளை ஓர்வல்தோட்டத்திலுள்ளஒருடிவிசனைச் சேர்ந்த 32தமிழ்க் குடும்பங்களுக்கு, அவர்கள் வசிக்கும் லயன்வீடுகளிலிருந்து வெளியேறுமாறும்.மேற்படி வீடுகளை பொலிஸ்அத்தியட்சகரிடம் ஒப்படைக்குமாறும் கண்டி உதவிஅரசாங்க அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

---

## தமிழீழத்தலைவர்..

—3-ம் பக்கத் தொடர்

கங்களை உன்னிப்பாகஅவதானித்தார்.

"வழக்கறிஞர்கள் விடுதலை இயக்கங்களில் பங்கேற்றுபெரும் வெற்றி கண்டுள்ளனர்-புதுவை வழக்கறிஞர்கள், ஈழத்தமிழருக்காக ஒருநாள் நீதிமன்றங்களைப் புறக்கணித்ததாக அறிந்தேன். என்வழக்கை உங்களிடம் கூறிவிட்டேன். நீங்கள் தீர்ப்புக்கூற வேண்டும்" என்ருர் அமிர்தலிங்கம்.

இரவு 8 மணிக்கு செஞ்சிக் கூட்டத்திற்கு புதுச்சேரியிலிருந்து புறப்பட்டுச்சென்ருர். புதுவை நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரு- மதுரகவியே ஏற்பாடு செய்திருந்தார்-

திரு. அமிர்தலிங்கம் புதுவையில் தங்கியிருந்தசமயம் தமிழ்ப் பண்பாட்டியக்க பொதுச்செயலாளர்திரு- கு. தமிழ் மன்னன், திரு- மணவைத்தம்பி, இலங்கைத் தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணியின் இணைச்செயலாளர் திரு. தங்கவேலாயுதன் மற்றும் இயக்கஆதரவாளர்கள் உடனிருந்து அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்புறநடந்தேறஒத்துழைத்தனர்

புதுவையில் தமிழீழ விடுதலை இயக்கம் புதியவலிவும் பெற திரு. அமிர்தலிங்கத்தின்புதுவை விஜயம் பேருதவியாக அமைந்தது.

—தகவல்: வல்வையூரான்

---

## பெரியதம்பண்ணையில் இருவர் கைது!

வவுனியா பெரிய தம்பண்ணைக் காட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக டிராக்டர் சொந்தக்காரர்என்றுசொல்லப்படும் சைமன்பிள்ளை, சரவணமுத்து பொன்னம்பலம் (வயது 36) ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். சரவணமுத்து விவாகமானவர் மனைவியும்ஐந்துபிள்ளைகளும் தாயாரும் இவருக்கு இருக்கின்றனர்.

---

## கடற்படைத்தள...

—1-ம் பக்கத் தொடர்

இந்த ஆவணத்தின் பெயர் "U.S. MILITARY POSTURE—AN OVERVIEW" என்தாகும். இதைத் தயாரித்[illegible] வர் அமெரிக்க இராணு[illegible] கூட்டு அதிகாரிகளின் கு[illegible] தலைவரான தளபதி டே[illegible] சி. ஜோன்ஸ் என்பவர்.

அவர்தயாரித்துள்ள இ[illegible] ஆவணத்தில் அமெ[illegible] கடற்படைக்கு வசதிவா[illegible] புள்ள துறைமுகங்களில்[illegible] ருகதிருகோணமலை[illegible] குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆவணத்தில் சோ[illegible] யத்யூனியனுக்குவாய்ப்பான தளங்கள் எவை எவையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளன- ஆனுல்திருகோணமலை அமெரிக்கத்தளத்துக்கு வாய்ப்பான இடம் என்று இதில் குறிப்பிடப் பட்டுள்ளதே தவிர—சோவியத் யூனியனுக்கு வாய்ப்பானது என்று குறிப்பிடப்படவில்லை.

ஆகதமிழீழநாட்டின்சர்வதேசசட்டங்களுக்குவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா, தமிழீழ மக்களின் இறைமையைமீறி, தமிழீழத்தின் வருங்காலத்தலை நகரமான திருகோணமலையை அந்நிய ஏகாதிபத்தியத்துக்குத் தாரைவார்த்து தனது நாட்டை வளமாக்க முயற்சிக்கிறது- இந்தத் தமிழீழ மக்கள் பாரதத்துடனும், சிறீலங்காவிலுள்ள முற்போக்கு சக்திகளுடனும் சேர்ந்துஎதிர்த்துப்போராடுவார்கள்,

---

## "உயிரைக்கொடுத்-

—1-ம் பக்கத் தொடர்

கம் எரிந்ததைப் புதுப்பிக்க, இங்கு தரப்பட்ட நூல்கள் ஒவ்வொன்றும், சிங்களவருக்கு தமிழினத்தின் பால் அச்சத்தைக் கொடுக்கும்.

வருங்காலத்திலாவது இங்கு கொடுக்கப்படும் நூல்களுக்குப் பாதுகாப்பு இருக்குமா என்றுகேட்கிருர்கள். தமிழர்களின் எந்தவகைப் பொருட்களுக்கும் அங்கு பாதுகாப்பு இல்லையென்றே கூறுவேன். இளைஞர்கள் இதைக்கேட்டுகவலையும் கோபமும்அடையலாம்.

உலகத்திலேயேதமிழ்நாட்டையும் முந்திக் கொண்டு எமக்காக 4.9.81 இல் கதவடைப்பு, வேலை நிறுத்தம் செய்தமைக்காக புதுவைமக்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையிலே தனித் தமிழ் நாடு கேட்டு நடத்தி வரும் போராட்டத்தில்,எத்தனையோ தமிழ்க் குடும்பங்களையும் தமிழர்களையும் சிங்கள இராணுவப் படை கொன்று குவித்துவிட்டது. அங்கு தமிழர்களின் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை.

இந்திய மண்ணில் பாண்டிச்சேரியிலும் தமிழ் நாட்டிலும் வாழும் ஐந்து கோடித் தமிழ் மக்களும், எமக்காகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நடத்தி, கடையடைப்பு ஹர்த்தால்கள்செய்து ஆர்ப்பாட்டங்களையும் மறியற் போராட்டங்களையும்நடத்தி சிங்கள அரசைத் திகைக்க வைத்தீர்கள். ரத்தபாசத்துடன் எமக்காக உயரக் குரல் எழுப்பினீர்கள்.

எரிமலையின்விளிம்பில்நாங்கள் இருக்கிறேம், எப்போது அது வெடிக்குமோ தெரியாது. ஈழத்தில் நாங்கள்எரிமலையைப் பார்த்ததில்லை; ஆனுல் மனித எரிமலையைப் பார்க்கிறேம்,

இலங்கையிலே ஒவ்வொரு நாள் இரவும் கொலை நடக்கிறது. சிங்கள இராணுவமும், பொலீஸ் படையும், தமிழர்களைத் தாக்கிக் கொலை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

சிங்கள இராணுவ வீரர்கள்மூன்றுடிறக்குகளில்வந்து என்னையும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் கைது செய்து அழைத்துச் சென்ருர்கள். எங்களை ஏன் கைது செய்தீர்கள் எனக் கேட்டேன். ஜனநாயகத்தை நாங்கள் அழிக்கிறேம் என்று கைது செய்வதாகக் கூறினுர்கள்.

என்னை அழைத்துச்சென்றபின், என் மனைவி பிரதமருக்கு டெலிபோன் செய்து கேட்டார். நான் கைதுசெய்யப்பட்டது பிரதமருக்கே தெரியாது என்று கூறப்பட்டது.

உடனே பிரதம மந்திரி ஜனுதிபதியிடம்டெலிபோன் செய்து விவரம் கேட்டார். ஏதோ தப்பாக நடந்துவிட்டது என்று ஜனுதிபதி கூறி, என்னையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் விடுதலை செய்ய உத்தரவிட்டார். அந்த அளவுக்குஎங்கள் நாட்டிலே அரசாங்கம் நசுக்கிறது.

கடந்தவாரம், பண்டாரவளையில் தமிழர்கள் வீடுகளையும் கடைகளையும் சிங்களவர்கள் தீவைத்துக் கொளுத்திவிட்டார்கள். கடைகளில் கொள்ளையடிக்கப்பட்டது. நாங்கள் எத்தனை நாளைக்குத்தான் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழமுடியும்?

இராவணன் ஆண்டகாலத்திலிருந்து வாழ்ந்தவர்கள் நாங்கள். எங்கள் 'வரலாற்றைத் திரித்து எழுதப்பார்க்கிருர்கள்.

என்னையும் என் மனைவியையும் கொலை செய்து ஒழித்துவிடப் பிரசாரம் செய்தார்கள். என் மனைவியைக் கற்பழிக்க வேண்டும் என்று சுவரொட்டி ஒட்டினுர்கள்.

தமிழினத்தின் விடுதலை என்ற துறை முகத்தை நோக்கி கப்பலைச் செலுத்துகிறேம். இடையில் பாறைகள்தடுத்தாலும்,இடர்படாமல் மெதுவாகக் கப்பலை செலுத்த வேண்டும்.

எப்படியும் நாங்கள் சுதந்திரத் தமிழ் நாட்டை அடைவோம். எமதுபோக்கிலேஎவ்வித மாற்றமும் இல்லை.

தமிழ் மண்ணைக்காக்க,எங்களை நிலையானவர்களாக்க, நாங்கள் தீவிர நடவடிக்கையெடுத்து வருகிறேம். உயிரைக்கொடுத்தாவதுதமிழர்களுக்குத் தனிநாடு பெற்றே தீருவோம்"

இவ்வாறு திரு.அமிர்தலிங்கம் பேசினுர். அவருடைய பேச்சை 'மாலை முரசு' முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளது.

---

## தமிழர்கள் யார்--

—1-ம் பக்கத் தொடர்

சமயம், ஏற்கெனவே ரயிலில் கத்தி; வாள், மற்றும் பயங்கர ஆயுதங்களுடன்ஏறியிருந்த பயங்கர வாதிகள். தமிழர்கள்யார்?யார்? என்று கேட்டபடி கைக்கடிகாரங்களையும், பெண்களின் தங்கச் சங்கிலிகளையும் பிடுங்கிஎடுத்தனராம்.

மலையகத் தமிழர்களினதும் தமிழ்ப்பெண்களினதும் சொத்துக்களை பலாத்காரமாகப் பறித்துக் கொண்ட இப்பயங்கரவாதிகள். தமிழ் இளைஞர் ஒருவரைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்திவிட்டு, ராகமை நிலையத்தை ரயில் அடையுமுன் ரயிலிலிருந்துபாய்ந்து ஓடி விட்டனர்.

இக்கொள்ளையும் தாக்குதல் சம்பவமும் சகபிரயாணிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முன்னிலையிலேயே இடம் பெற்றதாம்.

இன அடிப்படையிலேயே இத்தாக்குதலும் கொள்ளையும் நடைபெற்றதாக அந்த ரயிலில் பயணம் செய்த ஐ. தொ.கா. தொழிற்சங்கவாதியொருவர் தெரிவித்துள்ளார்.

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால், யாழ்ப்பாணம். மகாத்மாகாந்தி வீதி, 15- ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9- ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.